தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராய சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் சாலை சந்திப்பு
தேனாம்பேட்டை, சென்னை – 600 018. தொலைபேசி எண். 044–2435 7590.


**ஆணை நாள் : 29.01.2015**

**முன்னிலை**

**திரு. கிறிஸ்டோபர் நெல்சன், இ.கா.ப., (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

**வழக்கு எண்.58407/விசாரணை/F/2013**

திரு.இரா.கணேசன்,
த/பெ. அ. இராஜகோபால்,
29, சிவந்தாகுளம் இரண்டாவது தெரு,
தூத்துக்குடி – 3. …… மனுதாரர்

பொது தகவல் அலுவலர்/
மாவட்ட மேலாளர் மற்றும் துணை ஆட்சியர்,
டாஸ்மாக் லிமிடெட்,
கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் – 30. …… பொது அதிகார அமைப்பு

பார்வை :-

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுதாரரின் மனு நாள் | 29.07.2013 |
| பொது தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 08.08.2013 |
| தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் மனுதாரர் முதல் மேல்முறையீடு செய்த நாள் | 10.10.2013 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 28.10.2013 |
| தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)ன் கீழான மனுதாரர் இரண்டாவது மேல்முறையீடு செய்த நாள் | 14.12.2013 |

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (29.01.2015) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.இரா.கணேசன் மற்றும் திரு.அ.பஷீர், பொதுத் தகவல் அலுவலர்/ மாவட்ட மேலாளர் மற்றும் துணை ஆட்சியர், டாஸ்மாக் லிமிடெட், ஈரோடு மாவட்டம் ஆகியோர் ஆஜரானார்கள்.

2. மனுதாரர் 29.07.2013 நாளிட்ட சட்டப்பிரிவு 6(1)—ன் கீழான தம்முடைய மனுவில், 10.06.2013 அன்று தான் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் கோரிய தகவல்களுக்கு தமக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், திரு.தாஜீதீன், மேலாளர் அவர்களின் பணிப்பதிவேட்டின் நகலினை வழங்குமாறும் 2 இனங்களில் தகவல் வழங்க கோரி பொதுத் தகவல் அலுவலருக்கு கோரிக்கை வைத்துள்ளார்.

3. பொது தகவல் அலுவலர் 08.08.2013 அன்று தகவல்களை வழங்கியுள்ளார். அதில் திருப்தியடையாத மனுதாரர் 10.10.2013 அன்று தனது முதல் மேல்முறைட்டு மனுவை முதல் மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பிட, மேல்முறையீட்டு அலுவலர் 28.10.2013 அன்று மனுதாரருக்கு தகவல் வழங்கியுள்ளார். இருந்தபோதிலும், அதில் திருப்தியடையாத மனுதாரர் 14.12.2013 நாளிட்ட தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இன்று (29.01.2015) நடைபெற்றது.

4. இன்றைய விசாரணையின்போது மனுதாரர் தனது 10.06.2013 நாளிட்ட மனுவிற்கு அனைத்து தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதாகவும், திரு.தாஜீதீன், மேலாளர் அவர்களின் பணிப்பதிவேட்டின் நகல் மட்டும் வழங்கப்படவில்லை என தெரிவித்தார். மனுதாரர் ஒரு அரசு ஊழியரின் ஒட்டு மொத்த பணிப்பதிவேட்டினைக் கோருவது தகவல் அறியும் உரிமைச் சட்டப் பிரிவு 8(1)(j)—ன் படி முரண்பட்டதாக உள்ளது என இவ்வாணையம் கருதுகிறது. ஒரு அரசு ஊழியரின் வாரிசு நியமனம், சொத்து விவரங்கள் போன்றவை அவரது தனிப்பட்ட அந்தரங்க விஷயங்கள் எனவும், அவைகள் குறித்தும் அவரது பணிப்பதிவேட்டில் பதியப்பட்டிருக்கும் என்பதால் அவரது பணிப்பதிவேட்டினை முழுமையாக வழங்குவது முறையாகாது என இவ்வாணையம் கருதுகிறது. அது குறித்த விவரம் அல்லாத அரசு ஊழியரின் பணி சம்பந்தமான விவரங்கள், பதவி உயர்வு, பணியிட மாற்றம், ஊதிய விவரங்கள் மனுதாரருக்கு வழங்கப்படலாம் என்று இவ்வாணையம் கருதுகிறது.

5. எனவே, இன்றைய விசாரணையில் கீழ்க்கண்ட உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன:—

1. மனுதாரர் சம்பந்தப்பட்ட அரசு ஊழியரின் அந்தரங்க விவரங்களை தவிர்த்து அவரது பணிப் பற்றிய விவரங்களை எழுத்து மூலமாக எழுதி பொது தகவல் அலுவலரிடம் கோரிடவும், அவ்வாறு மனுதாரர் எழுத்துமூலமாக கோரினால், பொதுத் தகவல் அலுவலர் அதனை வழங்க வேண்டும் எனத் தெரிவித்து இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முடித்து வைக்கப்படுகிறது.

ஒம்/— (கிறிஸ்டோபர் நெல்சன்)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்